# CHAPTER – 37

# பழந்தமிழர் கப்பற்கலையும் கடல் வாணிகமும்

**முனைவர் சி. என். நாகூர்செல்வம்**

**துறைத்தலைவர், வரலாற்றுத் துறை**
**திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரி, இராசிபுரம்**

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற உயரிய நோக்கினைக் கொண்டிருந்தவர்கள் தமிழர்களாவர். அவ்வாறாக வாணிகத்தில் அதுவும் கடல்வழி வாணிகத்தில் பெருவிருப்புக்கொண்டிருந்தனர் தமிழர். யவனர்கள் கொண்டுவந்த பலவகை மதுபானங்களும் விளக்குகளும் பிற பொருட்களும் தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளமையால் பன்னெடுங்காலத்திற்கு முன்பே தமிழர்கள் கடல் வாணிகத்தில் சிறந்திருந்தனர் என்பது தெள்ளிதின் விளங்கும். அவ்வாறான பழந்தமிழர் வாணிகத்திற்குத் தேவையானவை சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கடற்கலங்களாம். வணிகம் செழிப்பதற்கு எவ்வகையான கடற்சீற்றத்தையும் தாங்கும் வகையில் கப்பல்கள் வடிவமைக்கப்பட்டிருத்தல் இன்றியமையாதது. அவ்வாறான கப்பல்களைப் பற்றியும் அதன்மூலம் நடைபெற்ற கடல்வழி வாணிகத்தினைப் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**கப்பற்கலை**

வணிகத்துக்குப் பயன்படும் கப்பல்கள் மிகப்பலவாக இருந்தன. அவை ஆற்றல் மிக்கவையாய் மட்டுமன்றி அழகாகவும் இருந்தன. கப்பல்கள் முன்புறத்தில் பலவகையான சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதுபற்றி சாத்தான்குளம் ஏ.ராகவன் ***நம் நாட்டு கப்பற் கலை*** எனும் நூலில் இவ்வாறு கூறுகிறார்.

"சிறந்த இலக்கியமாகப் போற்றப்படும் பெருங்கதையில்,

**'யானையும் சுரியுளை அரிமா னேறும்**
**மானிற் பெடையும் வாள்வரி யுழுவையும்**
**புள்ளு மாக்களும் முள்ளுறத் தியன்ற**

**நொய்ம்மா நுடும்புணை கைமுதற் றழீஇக்**
**கூறா டாயமொடு குழூஉக்கொண் டீண்டி**
**ஆறா டாயமொ டணவிழ வமர்தல்'**

என்று யானை, சிங்கம், பெண்மான், புலி, பலவிதப் பறவைகள் ஆகியவற்றின் மிக அமைப்புக் கொண்ட அம்பிகளில் ஏறி மகளிர் நீர் விளையாட்டுச் செய்தது கூறப்பட்டுள்ளது. ஆகையால், எல்லா விதச் சிறப்பும் பெற்றிருந்த கப்பற்கலை நம் நாட்டுக் கடல்வழி வாணிகத்திற்குப் பேருதவியாய் இருந்தது என்பதில் ஐயமில்லை.

இத்தாலியப் பயணியான மார்க்கோபோலோ பதின்மூன்றாம் நூற்றாண்டை அடுத்து வந்தார். இவர் சிறந்த மாலுமியாவார். தமிழ்நாட்டுக் கப்பல்களைப்பற்றி இவர் ஏற்றமிகக் கூறுகிறார். "தமிழ்நாட்டில் கட்டப்பட்ட கப்பல்கள் தேவதாரு மரத்தால் கட்டப்பட்டவை. நன்றாக உழைக்கக்கூடியவை." தமிழர்கள் கட்டிய வங்க நாட்டுப்பாணிக் கப்பல்கள் வங்கம் என்றும் ஆந்திர பாணியில் கட்டப்பட்டவை கப்பல்கள் என்றும் அழைக்கப்பட்டன. நாவாய் என்னும் கப்பல்கள் புறநானூற்றிலும் மதுரைக்காஞ்சியிலும் குறிப்பிடப்படுகின்றன. இவை சற்றே பெரிய கப்பல்கள். இவை கம்பராமாயணத்தில் குகனைப்பற்றிக் குறிப்பிடுகையில் 'கணக்கிறந்த நாவாயான்' என்று குறிப்பிடப்படுகின்றன.

**பழங்காலத்திலும் இடைக்காலத்திலும் கடல் வாணிகம் நடைபெற்றதற்கான சான்றுகள்**

**1.பானை ஓடுகள்**

அம்ஃபொரே ஜாடிகள் முக்கியமாய் மதுவகைகள் கொண்டுவர உபயோகப்படுத்தப்பட்டன. இவற்றின் சில்லுகள் சிதைந்துபோனாலும் அழிந்துபோகாதென்பதால் இவை பயனுள்ள சரித்திரச் சான்றுகளாக நிற்கின்றன. கள ஆய்வுகளில் இவை புதைந்துகிடக்கும் தள நிலையைக் கொண்டு இவற்றின் காலம் முடிவு செய்யப்படுகிறது. இவற்றுள் அதிகம் மதிக்கப்படுவன ரூலெடட் வேர் எனப்படும் மண்பாண்டங்கள். அவை பரப்பில் வழுவழுப்பாகச் செய்யப்பட்ட பின்னர் அவற்றின்மேல் சில சித்திர உருக்கள் வரையப்பட்டிருக்கும். ஆந்திரா தமிழ்நாடு ஆகிய பகுதிகளில்தான் இவை மிக அதிகமாகக் காணப்படுகின்றன. முக்கியமாக, சோழமண்டலக் கடற்கரையிலும் ஸ்ரீலங்காவிலும் காணப்படுகின்றன. தொடர்ந்து கிழக்குக்கரையிலும் ஸ்ரீலங்காவிலும் காணப்படுவதால் இவ்விடங்கள் இணைந்து கடல்வழி வாணிகத்தில் இடம்பெற்றது எனத் தெரிகிறது. S. சுரேஷ் என்பார் தரும் சில தகவல்கள் சில இங்கு குறிப்பிடப்படுகின்றன.

கண்டுபிடிக்கப்பட்ட ரூலெடட் ஓட்டுச் சில்லுகளை பொதுவாக இரு வகைகளாகப் பிரிக்கலாம். அவை உயர்தர, மத்தியத்தரைக்கடல் பிரதேச வகை; அடுத்தவகை, சற்றே தரம் குறைந்த முறையில் தயாரிக்கப்பட்டவை. கடல்வழி வாணிகத்தின் போதுதான் இந்தியாவில் இம்மாதிரியான பாண்டங்கள் செய்யப்பட்டன. கடல்வழி வாணிகம் குறைய ஆரம்பித்த பிறகு, இவையும் குறைய ஆரம்பித்தன. அழகன் குளத்தில் மட்டும்தான் இவ்வகைப் பாண்டங்கள் நான்காவது நூற்றாண்டுவரை புழக்கத்தில் இருந்தன. இதன்வழி அப்போதைய பொருளாதாரத்தின் நிலைமையும் நமக்குத் தெளிவாகின்றது. இந்த ஜாடிகளைப் பற்றிப் படிக்கையில், முக்கியமாய் ஆய்வாளர்கள் பார்ப்பது அவற்றின்மேல் வரையப்பட்ட உருவங்களையும் அப்போதிய தலைவர்கள் பற்றியுந்தாம். அவை டிடுலி பிக்டி (tituli picti) என்று ஆங்கிலத்தில் அறியப்படுபவை. அப்பாண்டங்கள் களிமண்ணால் செய்யப்பட்டு சுடப்பட்ட பிறகு, எழுதப்பட்ட விவரங்கள் ஆகும். அவைதாம் அப்பாண்டத்தின் உற்பத்தி இடத்தையும், அதன் காலத்தையும், அப்பாண்டத்தில் வந்த பொருளின் தன்மையையும் நமக்கு உணர்த்துகின்றன.

அம்பொரே என்னும் வார்த்தை லத்தீன் மொழியிலிருந்து வந்தது. முதலில் அம்பிபோரஸ் என்றறியப்பட்டது. ‘அன்ஃபி’ என்பது இருபக்கங்கள் என்பதைக் குறிக்கும். ‘ஃபோரஸ்’ என்பது ’தாங்கிக்கொண்டு’ என்பதைக் குறிக்கும். இது ஒருவகை ஜாடி; நீண்ட குழாய் போன்ற கழுத்தைக் கொண்து. இரு கைப்பிடிகளையும் உடையது. கிரேக்கர்களால் முதலில் பயன்படுத்தப்பட்டது. பிறகு ஐரோப்பாவின் எல்லா நாடுகளும் இவற்றைப் பயன்படுத்த ஆரம்பித்தன. அம்போரா கண்டுபிடிப்புகள் சுமார் 40 இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு மண்பாண்டங்களின் வாயிலாக அறியப்படும் தமிழர் கடல்வாணிகம், குறித்த செய்திகளை நாமறிய முடிகிறது.

## 2. துறைமுகங்கள் வாயிலாக அறியப்படும் பழந்தமிழர் கடல் வாணிகம்

புகார் என்ற இந்தக் காவிரிப்பூம்பட்டினம் துறைமுகமாய் மட்டுமல்லாது சங்கச் சோழர் காலத்துத் தலைநகரமாகவும் இருந்தது. சிலப்பதிகாரம் கூறுகிறபடி இது ஒரு விசாலமான நகரம். இப்போது இதன் அக்காலத்து எல்லைகள் நிச்சயிக்கப்பட்டுள்ளன. இந்நகரம் மூன்று பாகங்களாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது. மேற்கில் பட்டினப்பாக்கம், கிழக்கில் மருவூர்ப்பாக்கம், நடுவில் நாளங்காடியுமாக அமைந்திருந்தது.

சிலப்பதிகாரத்தில் தனித்தனியாய் மருவூர்பாக்கமும், பட்டினம்பாக்கமும் இந்திர விழா ஊரெடுத்த காதையில் விளக்கப்படுகின்றன.

மற்றோர் இடமான காரைக்காடு என்னும் கரையோர இடத்தில் சென்னைப் பல்கலைக் கழகம் ஓர் அகழாய்வு மேற்கொண்டது. இங்கு கூடக்கருப்பு சிவப்பு மண்பாண்டடத்துண்டுகள் கிடைத்துள்ளன. அவை கி.பி. முதல் நூற்றாண்டோ அதற்கு முன்னரோ ஒரு நூற்றாண்டுக்குள் என்று கணிக்கப்பட்டவை; அம்பொரொ வகையைச் சார்ந்தவை. தவிரவும் பலவகைப்பட்ட மணிகள், கற்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இப்பகுதி அரிக்கமேட்டிலிருந்து 40 கி.மீ. தொலைவுக்குள் தெற்கில் அமைந்துள்ளது. இக்கண்டுபிடிப்பும் ரோம வணிகத்தை நிலைநாட்டுகிறது. 1968-69ல் தமிழ்நாட்டுத் தொல்பொருள் ஆய்வுத்துறை இங்கு தனது ஆய்வுகளை மேற்கொண்டது.[4] இங்கு கிடைத்த சில ஓட்டுச் சில்லுகளைக் கரிப்பகுப்பாய்வு செய்துபார்த்தபோது தொல்லியல் துறையினர் இவையெல்லாம் கி.மு. 785 காலத்தைச் சேர்ந்தவை என அறிந்தனர்.

### 3. நாணய வழிச்சான்றுகள்

சீன மொழியில் இரு சொற்களைக் கொண்ட ஒரு வெண்கல மணி; திருவாரூரில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. சாந்தி சாந்தி என்ற பொருளுடைய வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இம்மணி கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டதாய் இருக்கலாம். இம்மணி சீன வணிகர் அல்லது புத்த துறவியினுடையதாக இருக்கலாம். இந்த மணியுடன் மூன்று சீனக் காசுகளும் சீனக்காசின் துண்டொன்றும் கிடைத்துள்ளது. இவற்றுல் ஒரு காசு படத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. அக்காசு ஹியூ சாங்க் (கி.பி.1120 - 1160) என்ற சீன அரசரால் வெளியிடப்பட்டது.

அயல்நாட்டு வணிகத்தில் இந்தியாவின் முக்கிய ஏற்றுமதிப்பொருள் மிளகும் ஏலக்காயுந்தாம். இவை அதிகமாகக் கிடைத்த இடங்கள் மேலைக் கடற்கரையோர மாநிலங்கள்தாம். இவற்றைத்தவிர அதிகம் ஏற்றுமதி செய்யப்பட்டது பெரில் எனப்படும் நீலக்கற்கள். இவை கோயமுத்தூருக்கு அருகில்தான் கிடைத்தன. ரோம நாட்டில் காணப்படும் இக்கற்கள் இந்திய நாட்டிலிருந்துதான் அந்நாட்டிற்குச் சென்றன. இவ்விடத்தில் நாம் முக்கியமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியது ஆந்திரநாட்டாரும் இக்கற்களை ரோம நாணயம் கொடுத்துத்தான் வாங்கினார்கள் என்பது தான். இதிலிருந்து அக்காலத்தில் ரோம நாணயங்கள், உள்நாட்டுச் செலாவணிக்கும் பயன்பட்டன என்று அறியலாம். கடல்வாணிகத்தில் பண்டைத்தமிழகம் சிறப்புடன்

விளங்கிற்று என்பதனை மேற்கண்ட நாணயச்சான்றுகள் நமக்குத் தெள்ளிதின் விளக்குகின்றன.

**4. வணிகக் குழுக்கள்**

சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் வணிகக்குழுக்களின் பெருமைகள் கூறப்பட்டுள்ளன. பட்டினப்பாலையிலும் இதுபற்றிய விரிவான குறிப்புகள் உள்ளன. மீரா ஆப்ரஹாம் என்பவர் தமது 'தென்னிந்தியாவின் இரண்டு இடைக்கால வாணிகக் குழுக்கள்' என்ற தமது நூலில் வணிகக் குழுக்கள் பற்றி விரிவாகக் கூறியுள்ளார். கங்கை கொன்ட சோழபுரம், பராந்தக சோழனின் கல்வெட்டு ஐந்நூற்றுவர், வரிவிலக்கு ஆகியன குறித்துச் சொல்கிறது.

இதுகுறித்து கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் தமது நூலில், "வணிகர்கள் சக்திவாய்ந்த குழுக்களாகத் தம்மை ஆக்கிக்கொண்டமையால் புற அரசியல் மாற்றங்களால் அவர்கள் பாதிக்கப்படவில்லை என்று கூறுகிறார். மேலும் அவர்கள் யானை, குதிரை, கற்கள் முதலியவற்றினையும் வணிகம் செய்தனர் என்றும் வணிக விதிகளைத் தவறாமல் கடைப்பிடித்தனர் என்றும் கூறுகிறார்.

தமிழ்நாட்டில் வணிக மேம்பாடு சுய ஆட்சியுடன் செயல்பட்ட பகுதிகளில் இருந்தது. ஆபரணங்கள் தயாரிப்பில் கரூர் முதன்மைபெற்றிருந்தது. உறையூர் மஸ்லின் ரோம் நாட்டில் வாங்கப்பட்டது. கடல்வழி வணிகத்தைத் தொடர்ந்து உள்ளூர் வணிகர்களும் சிறப்பாகச் செயல்பட்டனர். வணிகக் குழுக்கள் இருந்தமைக்கான சான்றுகள் பற்பல கண்டறியப்பட்டுள்ளன. இவையெல்லாம் சோழர்கள் மேனிலையில் இருந்தபோது அமைக்கப்பட்டிருந்தன. சோழர் ஆட்சியில் வணிகத் தூதுக்குழுக்கள் சீனாவுக்கு அனுப்பப்பட்டன. அவற்றுள் ஒன்று முதலாம் இராஜராஜனால் அனுப்பப்பட்டது. இந்திய – சீன வர்த்தகத்தில் சீன பீங்கான் முக்கியத்துவம் பெற்றிருந்தது. சீனர்கள் பங்கு வணிக முறையில் 11 –- 16ம் நூற்றாண்டுவரை சிறந்திருந்தனர். நகரத்தார் கடல்வழி வணிகத்தை உள்ளூரில் நடத்த இவர்கள் பெரும் பங்கு கொண்டிருந்தனர். இவர்கள் கல்வெட்டுகளில் வணிகச் சக்கரவர்த்திகள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தனர். இவ்வாறு கடல்வழி வாணிகம் வணிகக்குழுக்களின் வாயிலாகச் சிறப்பாகத் தமிழ்நாட்டில் நடைபெற்றது.

**மேற்கோள் நூல்கள்:**

1. மயிலை சீனி வேங்கட சாமி ***பழங்கால தமிழர் வணிகம்*** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் .
2. சாத்தான் குளம் அ ராகவன் .***நம் நாட்டுக் கப்பற் கலை*** தமிழ் புத்தகாலயம் .
3. முனைவர் சு செல்லப்பன் .***சங்க இலக்கியத் தேன்*** அன்றில் பதிப்பகம் .
4. பா ஜெயக்குமார் .***தமிழகத் துறைமுகங்கள்*** அன்பு வெளியீட்டகம் .
5. நரசய்யா ***கடல் வழி வணிகம்*** பழனியப்பா பிரதர்ஸ் .
6. K. Sritharan ***A Maritime History of India*** Publication Division.
7. S. Suresh ***Symbols of Trade*** Manohar Publications.
8. K. A. Nilakanta Sastri ***A History of South India*** Oxford Publications